පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 492
ආයතනයේ නම :- දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 492
நிறுவனத்தின் பெயர்:- மாவட்ட செயலகம் அம்பாறை
பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4)இன் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 492
Name of the institution: - District Secretariat Ampara
Submission of observation of Hon. Minister and Steps taken with regard to the reports tabled by the Committee on public Accounts in terms of Standing Order No.119 (4)

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 492
ආයතනයේ නම :- දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 492
நிறுவனத்தின் பெயர்:- மாவட்ட செயலகம் அம்பாறை
பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4)இன் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 492
Name of the institution: - District Secretariat Ampara
Submission of observation of Hon. Minister and Steps taken with regard to the reports tabled by the Committee on public Accounts in terms of Standing Order No.119 (4)

பாராளுமன்ற தொடர் இலக்கம் 492
மாவட்ட செயலகம், அம்பாறை

| அ.க.குழுவினால் எடுத்துக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|
| முதலாவது பகுதி: 92.00<br><br>i) சட்டவிரோதமாக பிடித்தல் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணபபடவில்லை | தற்போது பிரதேச செயலகம் ஊடாக இது தொடர்பாக ஆவணங்களைப் பேணிச் செல்லப்படுவதுடன், உரியமுறையில் அறிக்கையைப் பெற்றுக் கொண்டு இற்றைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | தற்போது அறிக்கையான தகவல்களின் பொழிப்புப் பிரதியை மாவட்ட செயலாளருக்கு பெற்றுக் கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ii)அவதானத்திற்குரிய ஆவணங்களை இற்றைப்படுத்திப் பேணபபடவில்லை. | இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுமாறு உரிய பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024 ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக இற்றைப்படுத்திப் பேணப்பட்டுள்ளது. |
| iii) 2004.05.11 திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கைக்கு அமைய சம்பளம் தயாரிக்கும் கணிணி மென்பொருளின் கடவுச் சொல் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மாற்றப்பட்டிருக்கவில்லை. | 2004.05.11 திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின் அறிவுரையைக் கடைபிடிக்குமாறு கணக்காளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| iv) கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படவில்லை. | உள்ளக சுற்றறிக்கை மற்றும் அறிவுரை ஊடாக பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| v) சகல வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் கடிதத்தை கைவசம் வைத்திருக்கவில்லை. | அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு உரித்து இல்லாத வாகனங்களின் உரிமையை உரிமை மாற்றம் செய்து கொள்வதற்கு கொன்டோலர் நாயக அலுவலகத்துடன் ஒருங்கிணைப்புடன் செயற்பட்டு வருவதுடன் அவ்வாறான 11 வாகனங்களின் உரிமை மாற்றல் விடயங்கள் மேற்கொள்வதற்கு பதிவுச் சான்றிதழ் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொம்டோலர் நாயக அலுவலகத்துடன் ஒருங்கிணைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| vi) சகல வாகனங்களிலும் அரச இலச்சினையை வர்ணப் பூசப்படவில்லை. | சகல குளம் வாகனங்களில் அரச இலட்சினையை வர்ணம் பூசுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| vii) வாகனமொன்று செயலிழந்து 08 மாதத்தை விட குறைந்த காலம் நீக்கப்படாது இருந்தது. | பயன்படுத்த முடியாத வாகனங்கள் மூன்று தொகுதிக்கு உரித்தாகின்றது. அதாவது பொது நிர்வாக அமைச்சிற்கு உரித்தான, உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு உரித்தான மற்றும் வேறு தாபனத்திற்கு உரித்தான வாகனங்கள் ஆகும். பொது நிர்வாக அமைச்சிற்கு உரித்தான மாவட்ட செயலகத்திடம் உள்ள செயலற்ற வாகனங்கள் அனைத்தையும் 2024.11.08 ஆம் திகதி ஏல விற்பனை செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய செயலற்ற வாகனங்கள் வேறு தாபனங்களுக்கு உரித்தான வாகனங்களாகும். இவ் வாகனங்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது பிரச்சினையாக உள்ளது. மேலும் இது தொடர்பாக ஆலோசனை கேட்டு மோட்டார் வாகன ஆணையாளருக்கும், திறைசேரிக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், இதுவரை பதில் கிடைக்கவில்லை. | பதில் தொடர்பாக நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளதுடன், தற்போது ஓரளவிற்கு பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு முடியுமான வாகனங்களை விமானப் படையினருக்கு பாரமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| viii) அரசின் வாகன விபத்து தொடர்பாக நி.பி. பிரகாரம் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை | தற்போது வாகன விபத்து தொடர்பாக நி.பி. 104 கீழ் நடவடிக்கை எடுத்து உரிய படிவத்தை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. (AMP/ADMN/VEHIC/23/KQ6633-Accident மற்றும் 2024.08.07 திகதிய கடிதம்) ஏனைய மோட்டார் வாகன விபத்துக்களுக்கு ஆரம்ப விசாரணை நடவடிக்கைகளுக்காக நி.பி. 104 பிரகாரம் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப விசாரணை விடயங்கள் முடிக்கப்பட்டுள்ள வாகனங்களின் விபத்து தொடர்பாக காப்புறுதி கம்பனியிடம் நட்ட ஈட்டுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |
| ix)வங்கி இணக்கக் கூற்றுக்களினால் வெளிப்படுத்தப்பட்ட சீராக்கம் செய்ய வேண்டி இருந்த நிலுமை தொடர்பாக நி.பி. பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சீராக்கங்களை ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளுமாறு கணக்காளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| x) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் இருந்து காணப்பட்டு வருகின்ற நிலுவைக் கடன் மீதி இருத்தல். | 2026.05.06 திகதிக்கு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் இருந்து வருகின்ற, மூன்று உத்தியோகத்தர்களுக்குரிய நிலுவகை கடன் மீதியின் கூட்டுதொகை ரூ.388,845.00 ஆகும். அக் கடன் நிலுவைகளையும் விரைவில் அறவிட்டு முடிக்குமாறு கணக்காளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| | | |
| இடண்டாம் பகுதி: 96.50<br><br>(i) முழு ஆளணியினரையும் உள்ளடக்கி செயலாற்றுகை உடன்படிக்கை தயாரித்து உடன்படிக்கை செய்யப்படவில்லை. | -------------------- | 2023.11.30 திகதிய 02/2018(I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஊடாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. |
| ii) மாவட்ட சுற்றாடல் குழு ஆகக் குறைந்தது 02 மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் கூடியிருக்கவில்லை | சுற்றாடல் அமைச்சின் ஊடாக குழுவினை நிறுவுமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், மாவட்ட மட்டத்தில் சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பதால், சுற்றாடல் குழுவை தனியாகப் பேணிச் செல்லும் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதென ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எனினும் தேவையான சகல சந்தர்ப்பங்களின் போதும் குறித்த குழு அங்கத்தவர்களான சகல உத்தியோகத்தர்களும் கலந்து கொள்கின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது சுற்றாடல் தொடர்பான பிரச்சினை கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக பல்வேறு சந்தர்ப்பங்களின் போது டெங்கு நோய் போன்ற அனர்த்தங்களின் போதும் விசேட கலந்துரையாடல் நடத்தி விசேட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | தற்போது மாவட்ட சுற்றாடல் உத்தியோகத்தர்களின் தேவைப்பாடு தொடர்பாக உரிய அமைச்சிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் உரிய முறையில் சுற்றாடல் குழு அமைத்து உரிய முறையில் நடாத்தி செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்
அம்பாறை.

Anupama Mangala Wickramarachchi
Government Agent / District Secretary
Ampara District

பிரதான கணக்காளர்,
மாவட்ட செயலகம்
அம்பாறை.

A.L. Mahroof
Chief Accountant
For Government Agent
Ampara - District

**செயலாளரின் பரிந்துரை**

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

**அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.